

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2026) சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.இளையகுமார் (எ) சூர்யா – ஆர்.நந்தினி (எ) ரேச்சல் இவாஞ்சலின் இணையரின் திருமண வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு மணமக்கள் இருவரும் கலைஞரும் கழகமும் போல, முதலமைச்சர் அவர்களும் மாநில உரிமைகளும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். மாவட்டச் செயலாளர் த.வேலு எம்.எல்.ஏ. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் எஸ். பூச்சி முருகன் மற்றும் கழக நிரிவாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2026) சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.ரவிச்சந்திரன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்று மணமக்கள் ஜி.ஜே.தரணிராஜ் – எஸ்.பொன்னரசி இருவரும், கலைஞரும் தமிழும் போல, தலைவரும் – உழைப்பும் போல, தமிழ்நாடும் திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., பா.தாயகம் கவி எம்.எல்.ஏ., மேயர் பிரியா, எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. மாவட்டப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் பா.ஜ.க.வின் அடிமையாகப் பேசுகிறார் பழனிசாமி!

# கமலாலயத்தின் கருத்தை தன்னுடைய கருத்தாக பேசுவதற்கு பழனிசாமி வெட்கப்பட வேண்டும்!

## இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, ஜூன்.7-

இதுகுறித்து அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

'தொகுதி மறுசீரமைப்பு எப்போது நடந்தாலும் அதில் தமிழ்நாட்டின் உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது என்பதை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்த போதே தெரிவித்தது நான்' எனச் சொல்லியிருக்கிறார் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.

சட்டமன்ற கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் சத்தமே இல்லாமல் கடந்த மார்ச் 25ம் தேதி டெல்லியில் போய் பழனிசாமி எதற்காகப் போய் இறங்கினார்? டெல்லியில் செய்தியாளர்கள் கேட்ட போது, "பிரத்யோகமான நபரைப் பார்க்க வரவில்லை. டெல்லி அதிமுக அலுவலகத்தைப் பார்க்க வந்தேன்" என ஏன் பொய் சொன்னார்? கள்ளக் கடத்தல்காரர்கள் மாதிரி கார்கள் மாறி மாறி சென்று, பழனிசாமி இறங்கிய இடம் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா வீடு.

பா.ஜ.க.வுடனான கள்ளக் கூட்டணியை நல்ல கூட்டணி ஆக்கப் போனவர், தொகுதி மறுசீரமைப்பு பற்றிப் பேசினாராம். இன்றைக்குப் புதுக்கதை எழுதுகிறார். "ஒரு மனுஷன் பொய் பேசலாம். ஆனா, ஏக்கர் கணக்கில் சொல்லக் கூடாது. அது எப்படிடா? நெஞ்சுல கொஞ்சம் கூட ஈரம் இல்லாமல் இவ்வளவு பெரிய பொய் சொல்லுற" என்று செந்திலை பார்த்து கவுண்டமணி சொல்லும் காமெடி போல இருக்கிறது.

பா.ஜ.க.வைப் பார்த்து கோரிக்கை வைக்கவே பழனிசாமிக்கு துப்பில்லை; வக்கில்லை; மானமில்லை. இவர் 'தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான என் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை' என்கிறார். கமலாலயத்தில் எழுதிக் கொடுக்கும் பேச்சுகளை எல்லாம் தன்னுடைய மவுத் பீஸில் பேசுவதற்கு பழனிசாமி வெட்கப்பட வேண்டும்.

**பாசிச பா.ஜ.க.வின் சதித்திட்டம்!**

மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பை நடத்தி, தமிழ்நாட்டில் நாடாளுமன்ற இடங்களைக் குறைப்பதுதான் பாசிச பா.ஜ.க.வின் சதித்திட்டம். இந்தச் சதியை நாட்டிலேயே முதன்முதலாக அம்பலப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருபவர் தமிழ்நாடு முதலமைச்சர்தான்.

தொகுதி மறுசீரமைப்பை எதிர்த்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினார் முதலமைச்சர்; தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கப்படும் மாநிலங்களின் முதலமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்களை எல்லாம் சென்னையில் அழைத்து கூட்டம்



போட்டது திராவிட மாடல் அரசு; அந்த பிரச்சினைக்காக பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்; நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார்கள் தி.மு.க. கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இப்படி ஏதாவது ஒரு வகையில் தொகுதி மறுசீரமைப்புக்காக எதிராக ஒரு பேச்சோ, எழுத்தோ அ.தி.மு.க. பதிவு செய்திருக்கிறதா? அதனைக் கேள்வி கேட்டால், 'அமித்ஷாவிடம் பேசினேன். ஒன்றிய அரசிடம் குரல் கொடுத்தேன்' என கலர் கலராக ரீல் விடுகிறார் பழனிசாமி.

**எடப்பாடி பழனிசாமியின் உலக மகா உருட்டு!**

பா.ஜ.க.வின் பாசிசத் திட்டத்தை முதலமைச்சர் அம்பலப்படுத்தியவுடன் அவர்களைக் காப்பாற்றப் புரளி நாடகத்தைக் காட்ட வந்துவிட்டார் கோழை சாமி! இந்தித் திணிப்பு, தொகுதி மறுசீரமைப்பு எனத் தமிழ்நாட்டை ஆதிக்கம் செய்யும் பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துக் கொண்டு அதை எதிர்ப்பேன் என்கிறாரே பழனிசாமி இதுதானே உலக மகா உருட்டு!

மாநிலங்களை ஒழித்துக் கட்டி நாட்டின் கூட்டாட்சி ஏற்பாட்டைச் சிதைக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் சதித்திட்டம் அதற்கு ஒரு வழியாகத்தான் தொகுதி மறுசீரமைப்பை பா.ஜ.க. பயன்படுத்த இருக்கிறது என்பது சின்னக் குழந்தைக்கும் தெரியும், சின்னப் புத்தி கொண்ட பழனிசாமிக்குத்தான் தெரியாது.

தமிழ்நாட்டின் உரிமைகளைக் காவு கொடுப்பதையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு செயல்படும் பழனிசாமி தனது டெல்லிப் பண்ணையார்களின் மனதைக் குளிர்விப்பதற்காக உதிர்க்கும் உளரல்களால் தான் ஒரு சிறந்த அடிமை என்பதை மணிக்கு ஒரு முறை நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

**பழனிசாமியின் இரட்டை வேடம்!**

தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து விட்டு, வெளியே வந்து ஒன்றிய பா.ஜ.க. அரசைத் தாஜா செய்வதற்காக ஜெயக்குமார் பேட்டி கொடுத்த டபுள் ரோல் கட்சிதானே அ.தி.மு.க. அனைத்துக் கட்சி கூட்டத்தில் உள்ளே ஒன்று பேசுவதும், வெளியே பா.ஜ.க.வின் மனம் நோகாமல் பேசுவதும் என இரட்டை வேடம் போட்டவர்தானே பழனிசாமி.

உறுதியாக... அறுதியாக... தாய் மீது ஆணையாக... 'பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை' என்றெல்லாம் சிலகாலம் வரை சொல்லி அ.தி.மு.க. தொண்டர்களை ஏமாற்றி, தமிழ்நாட்டு மக்களை நம்ப வைத்து கடைசியில் கழுத்தறுத்துவிட்டு அமித்ஷா காலில் விழுந்த கோழை பழனிசாமி பேசுகிறார். 'தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான என் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை' என்று.

பா.ஜ.க. கூட்டணி நிலைப்பாட்டிலேயே மாற்றம் கண்டவர். தொகுதி மறுசீரமைப்பு நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை எனச் சொன்னால் கேட்கிறவன் கேனையனா இருந்தா கேப்பையில் நெய் வடியுதுன்னு சொல்வாங்க என்ற பழ(னிசாமி)மொழி தான் நினைவுக்கு வருகிறது.

பா.ஜ.க.வோடு ஒட்டும் இல்லை. உறவும் இல்லை எனக் கூறி வந்த அ.தி.மு.க., அப்படியே UTurn அடித்து கமலாலயம் பக்கம் வண்டியைத் திருப்பியது போலத் தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்திலும் தன் நிலைப்பாட்டை மாற்றிவிட்டு இன்று வியாக்கியானம் பேசுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்டம் – வேளச்சேரி மேற்கு பகுதி

# சுற்றுச்சூழல் அணி ஆர்.பரசுராமன் - ப.மல்லிகா இல்ல மணவிழா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. – அசன் மௌலானா எம்.எல்.ஏ. வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜூன், 7-

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி சுற்றுசூழல் துணை அமைப்பாளர் அணி, ஆர்.பரசுராமன்-ப.மல்லிகா ஆகியோரின் புதல்வர் ப.ஹரிசங்கர், கே.நடராஜன்-ந.அமுதா ஆகியோரது புதல்வி ந.சௌந்தர்யா ஆகியோரின் திருமணம் நாளை (08.06.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 7.00 மணியளவில் எண்.431, ராமலிங்க நகர் பிரதான சாலை, ராம்நகர் வடக்கு, மடிப்பாக்கத்தில் அமைந்துள்ள எஸ்பி கிராண்ட் பேலஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (07.06.2025 - சனிக்கிழமை) மாலை



6.00 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கப்பாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா சு.சேகர், மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், 178-வது வட்டக் கழக செயலாளர் தரமணி த.பார்த்திபன் மற்றும் பா.யுகேந்திரன் எம்.தேவராஜ் - சின்னம்மா, எம்.முருகேசன்- லட்சுமி, என்.ராமன்-கௌரி, கே.ராஜேஷ் - திலகா, ஆர்.சேட்டு - மகேஸ்வரி, ஆர்.பிரபு- மாலதி, கே.நாகராஜன் - அமுதா, கே. தட்சணா மூர்த்தி - செந்தாமரை மற்றும் மாவட்டக்கழக நிர்வாகிகள், பகுதிக்கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### சே.பிரேம் ஆனந்த் தலைமை: திருவள்ளூர் மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி

# துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.வி.மோத்திஸ் ஜித்து திருமண வரவேற்பு விழா!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வாழ்த்துகிறார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. - கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருவள்ளூர் ஜூன் 07;

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவேற்காடு நகர் 6வது வார்டு கழகச் செயலாளர் தெய்வசிகாமணி மதுரவாயில் தெற்கு பகுதி பொறியாளர் அணி அமைப்பாளர் லோகேந்திரபாபு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.பிரியா குமார் இல்லத் திருமண வரவேற்பு விழா பாக்கம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ தேவி விநாயக திருமண மண்டபத்தில் 08.06.2025 நாளை ஞாயிற்று கிழமை மாலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் தலைமை தாங்குகிறார் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஞா.ரமேஷ், மு.ராஜா, மகேஸ்வரி பால விநாயகம், குட்டி(எ) பக்தவச்சலம், இ.என்.சேகர், இமானுவேல், ஆர். திலீப் ராஜ், ரா.ராஜீ, முன்னிலை வகிக்கிறார்கள் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் ஆர்.பிரவீன் குமார், க.பாபு, சாருக் சரபாத், ஆர்.சக்திபிரியதர்ஷினி, ஆர்.சூரிய பிர



காஷ், இ.கவியரசு, பி.சாரதா தேவி, மு.சுரேந்தர், ரித்தீஷ் கருணாகரன், எம்.ரம்யா ஆகியோர் வரவேற்பு உரை ஆற்றுகிறார்கள்.

இந் திருமண வரவேற்பு விழாவில் தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் மணமக்கள் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.வி.மோத்திஸ்(எ)ஜித்து யோ. வினோதா ஆகியோரை வாழ்த்துகிறார். இதில் மாநில ஆதி திராவிட நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, சி.எச்.சேகர், மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், பா. நரேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், விமல்வர்ஷசன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர்,

மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சண்.பிரகாஷ், மேயர் ஜி.உதயகுமார், சா.மு.நா. ஆசிம் ராஜா, டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், தங்கம் முரளி, என்.இ.கே. மூர்த்தி, ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன், தி.வே.முனுசாமி உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் நிர்வாகிகள் இன்னாள் முன்னாள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

முடிவில் நிர்வாகிகள் பழனி, ரவி, மாரிமுத்து, ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

# திருப்பெரும்புதூர் தொகுதி (BLA2, BLC) நிர்வாகிகள் ஆய்வுக் கூட்டம் - உறுப்பினர் சேர்க்கை!

### ஆ.ராசா எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் ஆய்வு!

காஞ்சிபுரம் , ஜூன். 7

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் தொகுதி (BLA2, BLC) நிர்வாகிகள் ஆய்வுக் கூட்டம் மற்றும் உறுப்பினர் சேர்க்கை நாளை (08.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணியளவில், குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் முன்னிலையில் 335, 337, 338, 334, 336, 323, 322, 339 ஆகிய பாகத்திலும், (09.06.2025 திங்கட்கிழமை) மாலை 5 மணியளவில், குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் முன்னிலையில் 331, 332, 333, 340, 341, 342 மற்றும் 324, 325 ஆகிய பாகத்திலும்,

(14.06.2025 சனிக்கிழமை) காலை 8 மணி முதல் மதியம் 1.30 மணி வரை, திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி முன்னிலையில் சிவபுரம், ஓம் மங்கலம், கப்பாங்கோட்டூர், குப்பம், செக்போஸ்ட், பிச்சிவாக்கம், துளசாபுரம், அக்கமாபுரம், உடையார் குப்பம், கோட்டூர் ஆகிய பூத்களிலும்,

அன்று மதியம் 3 மணி முதல் இரவு 7 மணி வரை, எலுமியான்கோட்டூர், செல்லம் பட்டிடை,

குணகரம்பாக்கம், குணகரம்பாக்கம், கண்ணந்தாங்கள் ஆகியோர் பூத்களிலும்,

(15.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில், திருப்பெரும்புதூர் நகரத்தில் நகரச் செயலாளர் இரா.சதீஷ்குமார் முன்னிலையில் 72, 71, 73, 70, 60, 66 ஆகியோர் பாகத்திலும்,

(15.6.2025 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 3 மணியளவில் திருபெரும்புதூர் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றியச் செயலாளர் ந.கோபால் முன்னிலையில் 91 வது பாகத்திலும், மாலை 4 மணிக்கு, 92 வது பாகத்திலும், மாலை 5 மணிக்கு, 93 வது பாகத்திலும், மாலை 6 மணிக்கு 94 வது பாகத்திலும், மாலை 7 மணிக்கு 95 ஆகிய பாகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இந்த ஆய்வுக் கூட்டங்களில் மிக முக்கியமாக (BLA2, BLC) பட்டியலில் உள்ள அனைவரும் கலந்து கொண்டு வருகை பதிவேட்டில் கையெழுத்து இடவேண்டும்.

மேலும் அந்த ஊராட்சியில் உள்ள கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் தகவல் தெரிவித்து சிறப்பான முறையில் பூத் ஆய்வு மற்றும் கழகத் தலைவர் பொதுக்குழுவில் விடுத்த ஆணையை நிறைவேற்ற 30% கழக புதிய உறுப்பினர் சேர்க்கை ஆகிய பணிகளை செம்மையாக நடந்திட ஏற்பாடுகள் எழுச்சியாக நடைபெற கழகப் பொறுப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இக்கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் கலந்து கொண்டு ஆய்வு செய்கின்றனர்.



தி.மு.க. பொறியாளர் அணி, வர்த்தகர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி ஆகிய அணிகளின் மாநில நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி, தலைவர் துரை கி.சரவணன், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், கழக நெசவாளர் அணிச் செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இந்த ஆலோசனைக் கூட்டத்தில் 4 அணிகளின் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 2025 – ஆம் ஆண்டிற்கான வருவாய் தீர்வாயத்தில் ( ஜமாபந்தி ) 52 பயனாளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. இராஜேந்திரன் ஆர் கிருஷ்ணசாமி ஆகியோர் பட்டா சான்றிதழ்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரும் ( தேர்தல் ) வருவாய் தீர்வாய அலுவலருமான டி. ஸ்ரீராம், வட்டாட்சியர் ந. ரஜினிகாந்த், தனி வட்டாட்சியர் ச. பரமசிவம் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் த. எத்திராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, ஒன்றிய குழு முன்னாள் துணைத் தலைவர் பர்கத்துல்லா, சொக்கலிங்கம், தனலட்சுமி, சுகுமார், கபிலன் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.